கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் - ஜூன் 20 அன்று நடைபெறுகிறது!

திருவாரூர் 'கலைஞர் கோட்டம்' - பீகார் முதல்வர் நிதிஷ்குமார் திறந்து வைக்கிறார்!

'முத்துவேலர் நூலகம்' - பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் திறந்து வைக்கிறார்!

திருவாரூர், ஜூன் 16-

திருவாரூரில் 'கலைஞர் கோட்டம்' திறப்பு விழா, வருகிற ஜூன் 20 அன்று மிகப் பிரம்மாண்டமாக நடைபெறுகிறது.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமையேற்று, கலைஞர் திருவுருவச் சிலையைத் திறந்து வைக்கிறார்.

இந்த எழில்மிகு விழாவில், பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்கள் கலந்துகொண்டு, "கலைஞர் கோட்டத்தை" திறந்து வைக்கிறார்.

பீகார் மாநில துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் அவர்கள், முத்துவேலர் நூலகத்தைத் திறந்து வைக்கிறார்.

விழாவில் - கவியரங்கம், பட்டிமன்றம், பாட்டரங்கம், பாராட்டரங்கம் என பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த உணர்ச்சிமிகு விழாவில், தமிழ்கூறு நல்லுலகெங்கணுமிருந்து மக்கள் திரண்டு வந்து பங்கேற்றுச் சிறப்பிக்கிறார்கள்.

பல நூற்றாண்டுகளாக உரிமை மறுக்கப்பட்டிருந்த ஒடுக்குமுறைக்கு ஆளாகியிருந்த இனத்தின் மீட்சிக்கு ஓயாது உழைத்து, உரிமைகள் பலவற்றை மீட்டுத் தந்த மகத்தான தலைவர் - தமிழினத் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழா எழுச்சியுடன் தொடங்கியுள்ளது.

நீதிக்கட்சியின் முன்னோடிகள் தொடங்கி தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் வழியில் வளர்ந்த திராவிட இயக்கத்தின் நூற்றாண்டு வரலாற்றில், முக்கால் நூற்றாண்டுகாலத்தைக் கடந்த பங்களிப்புக்குரியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். 95 வயது வரை வாழ்ந்த அவர், 80 ஆண்டுகால பொது வாழ்க்கையைக் கொண்ட பெருமைக்குரியவர்.

14 வயதில் பள்ளி மாணவராகத் தமிழ்க் கொடி ஏந்தி, இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து ஒலித்த அவரது போர்க்குரல், 80 வயது கடந்தும் சளைக்காமல் ஒலித்தது. திராவிட இயக்கத்தின் கொள்கை முழக்கங்களை படைப்புகள் வழியாகப் பாமர மக்களின் நெஞ்சிலும் பதியச் செய்தவர் அவர்.

'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்பதை ஆட்சி நிர்வாகத்தின் இலக்கணமாகக் கொண்டு செயல்பட்டவர் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்கள். தமிழ்நாட்டின் முதலமைச்சராக 5 முறை பொறுப்பேற்ற பெருமைக்குரியவர். 19 ஆண்டுகால ஆட்சியில், இந்தியாவுக்கே முன்னோடியான பல திட்டங்களைத் தந்தவர். அவர் வழங்கிய சமூகநீதிக்கான இடஒதுக்கீட்டின் காரணமாக கல்வியும் வேலைவாய்ப்பும் பெற்ற குடும்பத்தினர் ஏராளம். இன்று நாம் காணும் நவீனத் தமிழ்நாட்டை கட்டமைத்த சிற்பிதான் முத்தமிழறிஞர் கலைஞர்.

வாழ்நாளின் இறுதிவரை சளைக்காத போராளி!

தான் தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்தவர். களம் கண்ட 13 தேர்தல்களிலும் தோல்வியே காணாத வெற்றிச் சாதனையாளர்.

50 ஆண்டுகாலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் பொறுப்பை சுமந்து, அரை

நூற்றாண்டு காலம் தமிழ்நாட்டின் அரசியலைத் தீர்மானித்தவர். மொழியையும் இனத்தையும் காப்பதற்காகப் பல முறை சிறை கண்டவர். தனிமைச் சிறைக்கும் கலங்காதவர். வாழ்நாளின் இறுதிவரை சளைக்காத போராளி.

'உடன்பிறப்பே' எனும் ஒற்றைச் சொல்லால் ஒட்டுமொத்த உலகத் தமிழர்களின் இதயத்தில் இடம்பிடித்தவர் தமிழினத் தலைவர் கலைஞர். திருக்குவளை எனும் சிற்றூரில் பிறந்து, திருவாரூர் எனும் சிறு நகரத்தில் பயின்று, இளம் வயதிலேயே கொள்கை உணர்வுடன் வளர்ந்து, பன்முக ஆற்றலுடன் அனைத்துத் தளங்களிலும் அந்தக் கொள்கையை வளர்த்து, எவ்விதப் பின்னணியும் இல்லாத நிலையிலும், தன் அயராத உழைப்பால், கலை இலக்கியத்துறையிலும், பொது வாழ்விலும் உரிய இடத்தைப் பிடித்து, ஆட்சி செய்வதற்கு கிடைத்த வாய்ப்புகளில் எல்லாம் தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டி, தமிழினத்திற்குப் பெருமை சேர்த்தவர் நம் தலைவர் கலைஞர். தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் பெரும் புகழுக்கு மேலும் புகழ் சேர்க்கும் வண்ணம், அவர்கள் பிறந்த திருவாரூரில் அழகிய 'கோட்டம்' ஒன்றை நிறுவிட கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தீர்மானித்தார்.

அவரது வழிகாட்டுதலில் மிகுந்த எழிலோடு திருவாரூரில் உருவாகியுள்ள "கலைஞர் கோட்டத்தின்" திறப்பு விழா 20.6.2023 - செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.00 மணி அளவில் திருவாரூர் சகோதரிகளின் மங்கள இசையுடன் தொடங்குகிறது.

கவியரங்கம் – பட்டிமன்றம் பாராட்டரங்கம்!

அதனைத் தொடர்ந்து - கவிப்பேரரசு வைரமுத்துதலைமையில்கவியரங்கம்நடைபெறுகிறது.

இதில் - கவிஞர்கள் கபிலன், பா.விஜய், திருமதி ஆண்டாள் பிரியதர்ஷினி, தஞ்சை இனியன் ஆகியோர் கவிபாடுகின்றனர்.

கவியரங்கை அடுத்து - தமிழறிஞர் சாலமன் பாப்பையா அவர்களை நடுவராகக் கொண்டு, பட்டிமன்றம் நடைபெறுகிறது.

"மக்கள் மனதைப் பெரிதும் கவர்ந்தது முத்தமிழறிஞர் கலைஞரின் பேச்சே! எழுத்தே!" எனும் தலைப்பிலான இப்பட்டிமன்றத்தில் - "பேச்சே!" எனும் தலைப்பில் திருவாரூர் புலவர் சண்முக வடிவேல், திருமதி கவிதா ஜவகர், எஸ். ராஜா ஆகியோரும் -

"எழுத்தே!" எனும் தலைப்பில், புலவர் எம். ராமலிங்கம், இரா.மாது, திருமதி பாரதி பாஸ்கர் ஆகியோரும் வாதிடுகின்றனர்.

பட்டிமன்றத்தை அடுத்து - கலைமாமணி மாலதி லஷ்மன் குழுவினரின் பாட்டரங்கம் நடைபெறுகிறது.

பாட்டரங்கினைத் தொடர்ந்து, விழாவில் - தயாளு அம்மாள் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் மருத்துவர் மோகன் காமேஸ்வரன் வரவேற்புரையாற்றுகிறார்.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் சிலையைத் திறந்து வைத்து, விழாத் தலைமையுரையாற்றுகிறார்.

"கலைஞர் கோட்டத்தை" பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்கள், திறந்து வைத்து விழாச் சிறப்புரையாற்றுகிறார்.

பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ் அவர்கள், "முத்துவேலர் நூலகத்தை" திறந்து வைக்கிறார்.

தயாளு அம்மாள் அறக்கட்டளையின் அறங்காவலர் சம்பத்குமார் நன்றியுரையாற்றுகிறார்.

"இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் கலந்துகொள்கிறார்கள். தமிழ்கூறு நல்லுலகினர் அனைவரும் விழாவிற்கு வருகை புரிந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்." - என தயாளு அம்மாள் 'அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் மருத்துவர் மோகன் காமேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.'

நீதிமன்றத்தில் நடந்தது என்ன?

அமலாக்கத் துறை பொய்யான தகவல்களைக் கூறியுள்ளது!

மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. பேட்டி!

சென்னை, ஜூன் 16-

"நீதிமன்றத்தில் அமலாக்கத் துறை பொய்யான தகவல்களை கூறியுள்ளது" என்று மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. கூறியுள்ளார்.

அமைச்சர் செந்தில் பாலாஜி வழக்கில் சென்னை உயர் நீதிமன்றத்திலும், முதன்மை அமர்வு நீதிமன்றத்திலும் ஆஜரான பிறகு நீதிமன்ற வளாகத்தில் திமுக மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. செய்தியாளர்களைச் சந்தித்து பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது: "செந்தில் பாலாஜியை நள்ளிரவில் அமலாக்கத் துறை சட்டவிரோதமாக கைது செய்தது. அந்த கைது நடவடிக்கைகளில் இந்திய அரசியலமைப்பு சரத்துகளும், குற்றவியல் நடைமுறை சரத்துகளும் மீறப்பட்டுள்ளன. உச்ச நீதிமன்ற வழிகாட்டு நெறிமுறைகளை மீறி செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டிருக்கிறார்.

எனவே அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விடுதலை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் ஆட்கொணர்வு மனுவை செந்தில் பாலாஜி மனைவி தாக்கல் செய்தார். இந்த வழக்கில் இருந்து ஒரு நீதிபதி விலகிவிட்டதால், இன்று நீதிபதிகள் நிஷா பானு, பரத சக்ரவர்த்தி ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது.

அமலாக்கத் துறை சார்பில் நீதிமன்ற காவலுக்கு செந்தில் பாலாஜி அனுப்பப்பட்டுவிட்டார். எனவே ஆட்கொணர்வு மனு நிலைக்கத்தக்கது அல்ல என்று வாதிட்டனர்.

ஆனால் 2022ல் உச்ச நீதிமன்றம் தந்த தீர்ப்பில் கைது நடவடிக்கைகளிலும், நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தும் போதும் சட்டவிரோதம் இருந்தால் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்ய முடியும். அதை உயர் நீதிமன்றம் விசாரிக்கலாம் என்று சொல்லியிருக்கிறது. இதை நீதிமன்றத்தில் எடுத்துக் காட்டினோம்.

இதனை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் ஆட்கொணர்வு மனு மீதான அனைத்து பதில்களையும் அமலாக்கத் துறை வரும் 22ஆம் தேதி எடுத்து வைக்கலாம் என்று நீதிபதிகள் சொல்லியிருக்கிறார்கள். காவேரி மருத்துவமனையில் அனுமதித்து இதய அறுவை சிகிச்சை செய்ய உத்தரவிடுமாறு நாங்கள் கேட்டோம்.

இதற்கு அமலாக்கத் துறை கடுமையாக எதிர்த்தது. எய்ம்ஸில் இருந்து ஒரு சிறப்பு குழு அமைத்து செந்தில் பாலாஜியை பரிசோதிக்க வேண்டும் என்று வலியுறுத்தியது.

இதை கேட்ட நீதிபதிகள் செந்தில் பாலாஜியை நீதிமன்ற காவலிலேயே காவேரி மருத்துவமனைக்கு அழைத்து செல்ல வேண்டும். உரிய சிகிச்சை அளிக்க வேண்டும். காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாலும் கூட, எய்ம்ஸ் மருத்துவர்களோ அல்லது அமலாக்கத் துறை விரும்பும் மருத்துவர்களோ அங்கு அளிக்கப்படும் பரிசோதனை சரிதானா என உறுதி செய்து கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் மருத்துவ சிகிச்சையை முறையாக நடக்கிறதா என சரிபார்த்துகொள்ளலாம்.

ஜாமீன் மனுவை பொறுத்தவரை, எய்ம்ஸ் மருத்துவ பரிசோதனை கேட்டு அமலாக்கத் துறை தாக்கல் செய்த மனுவில் உண்மைக்கு புறம்பான செய்திகளை அமலாக்கத் துறை துணை இயக்குநர் கூறியுள்ளார். ஒரு மனிதனின் நலனுக்கு எதிராக ஆவணங்களை உருவாக்கி, ஒரு பொது ஊழியர் தவறு செய்தார் என்றால் அது இந்திய தண்டனை சட்டப்படி தண்டிக்கத்தக்கது. எனவே செந்தில் பாலாஜி சார்பில் அமலாக்கத் துறை அதிகாரிகள் மீது குற்றவியல் நடைமுறை தொடங்க உரிய அனுமதி கேட்டோம். அதற்கான மனுவை தாக்கல் செய்யும் போது நீதிமன்றம் அதை அனுமதிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஓமந்தூரார்ரில் உரிய சிகிச்சை கிடைக்கும் என சொல்லும் அமலாக்கத் துறை ஓமந்தூரார் மருத்துவ அறிக்கையை ஏற்க மறுக்கிறது. இதிலிருந்து அமலாக்கத் துறை எப்படி நடந்துகொள்கிறது என்று புரிந்துகொள்ளலாம். இஎஸ்ஐ மருத்துவர்களும் செந்தில் பாலாஜிக்கு இருக்கும் பாதிப்பை உறுதி செய்துள்ளனர்".

இவ்வாறு என்.ஆர். இளங்கோ எம்.பி. கூறினார்.

கர்நாடகாவில் பா.ஜ.க. அரசு கொண்டுவந்த

மதமாற்ற தடைச் சட்டம் திரும்பப் பெறப்பட்டது!

அமைச்சரவை ஒப்புதல்!

பெங்களூரு, ஜூன்.16-

கர்நாடகாவில் முந்தைய பாஜக அரசு கொண்டு வந்த மதமாற்ற தடைச் சட்டத்தை திரும்பப் பெற கர்நாடக அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

கர்நாடக அமைச்சரவைக் கூட்டம் முதல்வர் சித்தராமையா தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில், பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, முந்தைய பாஜக அரசால் கடந்த ஆண்டு செப்டம்பரில் மதமாற்ற தடைச் சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்துக்கு அப்போதைய சட்டமன்ற எதிர்க்கட்சியான காங்கிரஸ் கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இதற்கான மசோதா சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்ட போது காங்கிரஸ் கட்சி வெளிநடப்பு செய்தது. இந்நிலையில், மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ள காங்கிரஸ், அந்த சட்டத்தை திரும்பப் பெற முடிவு செய்துள்ளது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய சட்டமன்ற விவகாரத் துறை அமைச்சர் பாட்டீல், "மதமாற்ற தடைச் சட்டம் குறித்து அமைச்சரவை விவாதித்தது. அதில், மதமாற்ற தடைச் சட்டத்தை திரும்பப் பெறுவது என முடிவெடுக்கப்பட்டது. அடுத்த மாதம் 3-ம் தேதி கூட உள்ள சட்டமன்றக் கூட்டத்தொடரில் இதற்கான மசோதா தாக்கல் செய்யப்படும்" என தெரிவித்தார்.

பாடப் புத்தகத்தில் மாற்றம்:

கர்நாடக மாநில பாடத் திட்டத்தில் கடந்த ஆட்சியாளர்களால் சேர்க்கப்பட்ட ஆர்எஸ்எஸ் நிறுவனர் ஹெட்கேவார் குறித்த பாடம் நீக்கப்படும் என்று கர்நாடக கல்வி அமைச்சர் மது பங்காரப்பா தெரிவித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், "இன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், ஆர்எஸ்எஸ் தலைவர் ஹெட்கேவார் குறித்த பாடத்தை பாடப் புத்தகத்தில் இருந்து நீக்க முடிவெடுக்கப்பட்டது. நாங்கள் ஆட்சியில் இருந்தபோது நடைமுறையில் இருந்த பழைய பாடத் திட்டம் மீண்டும் அறிமுகப்படுத்தப்படும். துணைப் பாட புத்தகங்கள் திருத்தப்பட்ட மாற்றங்களுடன் வழங்கப்படும். அதேநேரத்தில், புதிய பாட புத்தகங்கள் அச்சிடப்பட மாட்டாது. திருத்தப்பட்ட பாட புத்தகங்கள் இன்னும் 10-15 நாட்களில் மாணவர்களுக்கு வழங்கப்படும்" என தெரிவித்தார்.

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! கு.குமார் வரவேற்புரை!

மதுராந்தகத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

மதுராந்தகம், ஜூன் 16 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் நல உதவிகள் வழங்கும் விழா - மாபெரும் பொதுக் கூட்டம் நாளை (17.6.2023 - சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு, மதுராந்தகம், தேரடித் தெருவில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். நகரக் கழகச் செயலாளர் கு.குமார் வரவேற்றுப் பேசுகிறார்.

மதுராந்தகம் வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.எச்.சத்தியசாய், தெற்கு ஒன்றியச் செயலாளர் பொன்.சிவக்குமார், அச்சிறுப்பாக்கம் ஒன்றியச் செயலாளர்கள் கே.கண்ணன், ஜி.தம்பு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றுகின்றார்.

மாவட்ட துணைச் செயலாளர்கள் க.செல்வம் எம்.பி., டி.வீ.கோகுல கண்ணன், நகர்மன்றத் தலைவர் கு.மலர்விழி , எஸ்.டி.பிரேம்சந்த், எஸ். உசேன், ஆ.சுந்தரமூர்த்தி, வி.டி.ஆர்.வி.எழிலரசன், செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சி குழு தலைவர் து.செம்பருத்தி, தசரதன், நந்தினி கரிகாலன், கே.சிவலிங்கம், அ.நூருல் அமீன், எம்.காமராஜ், கோ. வசந்தா, எஸ்.மாலதி, பி.ராஜாராமகிருஷ்ணா, பொன்.கேசவன், என்.சங்கர், ஆர்.பரணி, எம்.என். மூர்த்தி, சி.கிருஷ்ணன், கோமதிகபிலன், எம். ராஜா, டி.கே.ராஜா, கே. ஏழுமலை, கே.குருமூர்த்தி, கற்பகம் வெங்கடேசன், கோமதிபிரபாகரன், எஸ். அர்ச்சுணன், ராதிகா குமரன், நதியா மகேந்திரன், ஞானசுந்தரி லட்சுமிபதி, ஜெ.ஜெர்லின்ஜோஸ், தே.சசிகுமார், கிஷோர் குமார், சுசிலாதேவி அரி, சரளா தனசேகரன், லட்சுமி கேசவன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

டி.சேகர், ஜி.சண்முகம் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இக்கூட்டத்தில் நகரக் கழக நிர்வாகிகள், முன்னணியினர்,வார்டுச் செயலாளர்கள், வார்டு நிர்வாகிகள், அனைத்து அணியினர் பங்கேற்று சிறப்பிக்குமாறு நகரச் செயலாளர் கு.குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆளுநர் மாளிகை அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

சென்னை தெற்கு மாவட்ட மாணவர் அணியினர் திரளாகப் பங்கேற்பீர்!

வழக்கறிஞர் பா.அருண்குமார் வேண்டுகோள்!

சென்னை, ஜூன் 16-

சென்னை தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பா.அருண்குமார் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

தமிழ்நாட்டு மாணவர்களின் உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்பை சீர்குலைக்கும் வகையில் பட்டமளிக்கும் கடமையை செய்யாமல் தவிர்த்து காலதாமதப்படுத்தி வரும் தமிழ்நாடு ஆளுநரை கண்டித்தும் தி.மு.கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற பேரவையில் பல்கலைக் கழக துணைவேந்தர்களை மாநில அரசே நியமிக்கும் வகையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன் வடிவுகளை உடனே ஒப்புதல் வழங்கிட வலியுறுத்தியும் தி.மு.க. மாணவர் அணி மற்றும் தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு (FSO) சார்பாக இன்று (16.6.2023 - வெள்ளிக்கிழமை) காலை 10 மணி அளவில் ஆளுநர் மாளிகை அருகில் உள்ள சின்னமலை சாலை (அடையாறு ஆனந்த பவன்) சந்திப்பில் திமுக மாணவர் அணி செயலாளர் சி.வி. எம்.பி .எழிலரசன் எம்.எல்.ஏ. தலைமையில் அறவழியில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சென்னை தெற்கு மாவட்ட மாணவர் அணி நிர்வாகிகள் மாணவர் அணி நண்பர்கள் மற்றும் மாணவர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு வெற்றியடைய செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வழக்கறிஞர் பா.அருண்குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழ்நாடு அரசு

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

நாமக்கல் மாவட்டம்

முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் (MGSMT) – 25% Component - 2022-23 & 2023-24

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண், 1575/2023/அ6, நாள்-13,06,2023

மின் ஒப்பந்தப்புள்ளி

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை பார்வையிடவும்
2. நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அவர்களால் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் MGSMT (25% Component) 2022-23 & 2023-24 நாமக்கல் மாவட்டத்தில் அனைத்து வட்டாரங்களில் உள்ள ஊரகச் சாலைகளை மேம்படுத்துதல் மற்றும் செப்பணிடுதல் செய்யும் பணிகளுக்கு சிப்பங்கள் வாரியாக இ-மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரு உறைகள்) மூலம் வரவேற்கப்படுகிறது.
3. சிப்பங்கள் வாரியான ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தினை www.tntenders.govin என்ற இணையதள முகவரியில் 16.06.2023 முதல் 30.06.2023 வரையிலான காலத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
   i. மின் ஒப்பந்த ஆவணம் பதிவிறக்கம் மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் - 30.06.2023 - 15.00 மணி வரை
   ii. மின்ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் - 30.06.2023 - 16.00 மணி முதல்

செ.மா.தொ.இ./3073/ஒப்பந்தப்புள்ளி/2023

திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல் மாவட்டம்

"சோதனை வந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (15.06.2023) சென்னை, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ் வளாகத்தில், 104 மருத்துவ உதவி மற்றும் தகவல் மையம் மூலம், நீட் தேர்வு எழுதிய மாணவ மாணவியர்களுக்கு ஏற்படும் மன உளைச்சலை தவிர்க்கும் வகையில் "மனநல ஆலோசனை வழங்கும் நிகழ்வினை தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதிஷ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் கோவிந்தராவ், மருத்துவக் கல்வி தேர்வுக் குழுத் செயலாளர் மரு.முத்துச்செல்வன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.